1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தொட்டியில் குடிநீர் விநியோகத்தை அதிகப்படுத்துவதற்கென, பெரம்பலூர் பேரூராட்சியின் தீர்மானத்திற்கிணங்க, ஊராட்சியின் நிதியிலிருந்து 7.5 குதிரை சக்தி ஆயில் என்ஜின் ஒன்று ரூ. 8,195-க்கு இராஜாமணி ஏஜென்சீஸ் நிறுவனத்தாரிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது.

பழயாற்றின் குறுக்கே பாலம்

* 199 வின.—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுக்கா, தாமரைகுளத்தையும், குற்குரும்பொத்தையையும் இணைக்கும் விதத்தில் பழயாற்றின் மீது ஒரு பாலம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

எல்லாபுரம், கும்முடிப்பூண்டி ஒன்றியங்களில் கிராமச்சாலைப் பணிகள்

* 200 வின.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், 1500 மக்கள் தொகையிருந்தும் இன்னும் கிராமச்சாலைத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்படாத சாலைகள் எவை, எவை?

(இ) இவை எப்பொழுது கிராமச்சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.